தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 3 | தி.பி. 2016 | சுறவம் 14 (27-1-85) | 65 காசுகள் | இதழ் எண் : 51 | பகுதி 1

பரிவினால் அன்று; பணத்தினாலே இந்திரா கட்சி வென்றது!

கட்சிகள் சமநிலை பெறவேண்டுமானால், தேர்தலில் பண ஆளுமை தடுக்கப்பட வேண்டும்!

ஒருகட்சி வளர்ச்சி குடியரசமைப்பைச் சீர்குலைத்து விடும்!

தமிழகத்தில் இந்திரா கட்சி வளர்வது, தமிழினத்தின் நலிவுகளுக்கே வழிவகுக்கும்!

தி.மு.க. வின் தோல்விகளுக்கு அதன் அணுகுமுறைகளே காரணம்!

அ. தி. மு. க. இந்தியத் தேசிய வளர்ச்சிக்குத் துணை போகுமானால், தமிழகம் இன்னொரு தமிழீழம் ஆகும்!

மக்களின் அறிவை வளர்த்தெடுக்காமல் குடியரசமைப்பு வெற்றி பெறாது இந்தியா அனைத்ததிகார நாடாக மாறி வருகிறது!

வானொலியும், தொலைக்காட்சியும் அரசின் கையில் இருக்கக் கூடாது!

தேர்தல் முடிவுகள் பற்றிப் பாவலரேறு கருத்து!

சென்ற மாத இறுதியில் அடித்த தேர்தல் புயலால் பல வாறான கட்சிகளின் நெடுமரங்கள் சாய்க்கப் பட்டுள்ளன. பலநூறு கட்சிச் செடிகள் சிதைந்துள்ளன. சில கட்சிமரங்கள், ஆணிவேர் சல்லிவேர்களோடு பெயர்த்தெறியப்பட்டுள்ளன. இவ்வாறான பற்பல சிதைவுகளுக்ிடையே இந்திரா பேராயக் கட்சியின் கொடிமரம், வலிந்த பணமுதலாளிகளால் ஆழமாக நடப்பட்டு விட்டது. இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் வலிவான அனைத்ததிகார (சர்வாதிகார) ஆட்சிக்கு வேரூன்றப்பட்டு விட்டது. இனி, இதற்கிடையில் குடியாட்சி (சனநாயக) முறை, பிழைத்து நின்று, அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தை எட்டுவதென்பது மிக மிக அரிது.

நடந்துமுடிந்த தேர்தலின் விளைவுகளைப் பற்றிப் பலரும் பலவகையான கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

'இந்திராவின் இரக்க அலையால் பேராயம் வென்றுள்ளது' என்றனர் சிலர்.

"இந்த வெற்றி இந்திராக் கட்சிக் கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றி" என்றனர் சிலர்.

பாரதிய சனதாதலைவர் வாச்பாயி சொன்னார் : 'இது பணவலிவுக்கும், ஆள்வலிவுக்கும், அதிகார வலிவுக்குமே கிடைத்த வெற்றி. இந்திரா கட்சி அரசியலை அருவருப்பாக்கி வருகிறது; ஊழலை ஊக்குவித்து வருகிறது. குடியாட்சியின் மதிப்பைச் சீர்குலைத்து வருகிறது." — என்று.

தாழ்த்தப்பட்ட தொழிலாளர் உழவர் (தலித் மசுதூர் கிசான்) கட்சித்தலைவர், சரண் சிங், 'இத் தேர்தல் முடிவு கற்பனைக்கும் பகுத்தறிவுக்கும் எட்டாததாக உள்ளது' என்றார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர், 'இத்தேர்தல்முடிவால் அமெரிக்க-இந்திய நல்லுறவு மேலும் வலிவடையும்' என்று கூறியிருக்கிறார்,

பாக்கித்தான் குடியரசுத் தலைவர் சியா சொன்னார், 'இம் முடிவு இந்தியாவுக்கும் பாக்கித்தானுக்கும் இருதிறத்திலும் நன்மையான உறவை வலுப்படுத்தும்' என்று.

உருசியச் செய்தி நிறுவனம் 'டாசு' 'இந்திராக் கட்சியின் வெற்றி நயன்மையானது (நியாயமானது); பெருமையுடையது' என்று மதிப்பிட்டது.

'பணம், அரசு அதிகாரம், பொதுமக்கள் தொடர்புக் கருவிகள் - இவற்றைத் தவறாகப் பயன்படுத்தியன் விளைவாகவே இந்திராக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது ... தீவிர மதவெறியினால் மக்கள் ஏழ்மையையும், பாதுகாப்பின்மையையும், சட்ட ஒழுங்கின்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும், தாமகளே தேடிக் கொண்டனர்' - என்று சனதாகட்சி மதிப்பிட்டது.

ஈ.எம்.எசு. நம்பூதிரி பாது சொன்னார், 'எதிர்க்கட்சிகள் சரியான மக்கள் நலக் கொள்கைகளின் அடிப்படையில் கூட்டுச் சேரவில்லை' - என்று.

சனதா கட்சித்தலைவர் சந்திரசேகர் 'அண்மையில் நாட்டில் நடந்த உணர்ச்சிப் பெருக்கான நிகழ்ச்சிகளே, நாட்டு மக்களின் கவனத்தை உண்மையான, உடனடியான சிக்கல்களிலிருந்து திசை திருப்பி விட்டன; அறிவு தோற்றது; உணர்ச்சி வென்றது' என்றார்.

— இவ்வாறு, பலவகையில் பலரும், தம்தம் அறிவுக்கும், பட்டறிவுக்கும் தகுந்தபடி இத் தேர்தல் முடிவுகளைத் திறனாய்வு செய்தனர்.

பொதுவாகவே ஒருவிளைவு பலருக்கும் எவ்வாறு வேறு

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

தி.மு.க. வின் அணுகு முறைகளும், அதன் தேர்தல் தோல்விகளும்!

— தென்மொழி நா. இளமாறன் —

தமிழ் என்ற சொல்லே ஆரிய வழக்கிற்காகத் திரமிள - த்திரவிட - திராவிட - திராவிடம் என்பதாக மாற்றப்பட்டுள்ளதை இன்று பாவாணர் போன்ற அறிஞர்கள் மெய்ப்பித்து, இனி திராவிடம் என்ற சொல் ஆரியக் கலப்பால் தமிழிலிருந்து பிரிந்த, தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற 23 திராவிட மொழிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. இந்நிலையில் திராவிடர் என்பது அம்மொழி பேசும் மக்களையே குறிக்கும். தமிழியம் என்பதே இன்று தமிழையும், திரவிட மொழிகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாக அறிஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே திராவிடம் என்பது இன்றைய நிலையில் தமிழ் தவிர்ந்த பிற திராவிட மொழி பேசும் மக்களையே குறிக்கும்.

இந்நிலையில், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்பன அறிவியல் முறையில் தமிழினத்தைக்குறிக்காது என்பதை எளிதேஉணரலாம். தந்தை பெரியார் காலத்தில் திராவிடர் கழகம் என்பது ஒரு வேளைபொருத்தமாக இருந்திருக்கலாம். தமிழ் ஆய்வு வளராத காலம் அவர்காலம். திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரை வைத்துக் கொண்டு அதே திராவிட இனத்தைச் சேர்ந்த திரு. ம.கோ. இராமச்சந்திரன் அவர்களை மலையாளி என்று வேறுபடுத்துவது உண்மையில் கொஞ்சமும் பொருளற்றதாகும். அவர் மலையாளியாய் இருந்தால் அவர்தான் உண்மையான திராவிடர். எனவே தி.மு.க. வினர் தமிழ், தமிழ்இனம் என்று பேசுவது மட்டுமே செய்து கொண்டு படிப்படியாகத் தமிழின உணர்வையே மழுங்கடித்துக் கொண்டே வந்துள்ளனர். தி.மு.க. வின் வேட்பாளர் பட்டியலைப் பார்த்தால் 95 விழுக்காடு தமிழ்ப் பெயரே இல்லை. அதிலும் வடமொழி எழுத்துகளைப் பயன்படுத்தித் தான் சிலருடைய பெயரை எழுத முடியும். சரி அது தான் போகட்டும் பெயருக்கு முன் எழுதப்படும் தந்தை பெயரின் முன்னெழுத்தைக் கூட தமிழில் எழுதாமல் ஆங்கிலத்தில் கொட்டை கொட்டையாக அச்சிட்டு விளம்பரப் படுத்துகின்றனர். இவர் தம் சொந்தப் பெயரையே தமிழில் வெளிப்படுத்த விருப்பமும் ஆர்வமும் இல்லாத நிலையில் தமிழகத்தில் எவ்வாறு தமிழை வாழவைப்பார்கள் என்று நம்புவது!

தமிழ் இனத்தின் தானைத் தலைவர் என்று கலைஞர் விளம்பரப் படுத்தப்படுகிறார். ஆனால் அந்தத் தமிழினத்தின் ஒரு பகுதி இன்று இலங்கையில் சிங்கள அரசாலும், படைகளாலும் வெறியர்களாலும் சிதைக்கப் படுகையில் அதைத் தடுத்துத் தமிழனின் உரிமைப் போராட்டத்தின் தலைமையேற்றுத் தமிழீழம் தோன்ற வழிவகுப்பதன் மூலமாக அன்றே தமிழினத்தின் தலைவராக இயலும். ஊர்வலம் செல்வதும், பதவியை விடுப்பதும் உரிய விளைவைத் தந்து அங்கு தமிழினத்தைக் காக்க வில்லையே! அதற்குப் பின்னரும் தமிழினம் சிதைக்கப் படுவது நிற்க வில்லையே! உண்மையிலேயே ஈழத் தமிழினத்தைக் காக்க வேண்டுமானால் உடனடியாக

1 இந்திய அரசை, சிங்கள அரசுடனான தூதரகத் தொடர்பைத் துண்டிக்கச் செய்யவேண்டும்.

2 தமிழீழ நாட்டிற்கான இந்திய அரசின் உடன் பாட்டைப் (அங்கீகாரத்தைப்) பெற்றுத் தர வேண்டும். மேற்கண்ட இரு கோரிக்கைகளையும் குறிப்பிட்ட நாள்களுக்குள் நடுவணரசை ஏற்கச் செய்ய வேண்டும். இல்லையென்றால் 25 இலக்கம் உறுப்பினர்களைப் பெற்றுள்ள தி.மு.க வில் குறைந்தது 5 இலக்கம் பேராவது அறவழியில் நடுவணரசு அலுவலகங்களை இயங்க விடாமல் அணி அணியாக மறியல் செய்து நாட்டில் உள்ள சிறைச்சாலைகளை நிரப்ப வேண்டும். நடுவணரசால் இயலவில்லையென்றால் தமிழ்நாட்டைத்தாண்டி தில்லி அரசின் எல்லைகளை வைத்துக்கொள்ளச் சொல்லி எச்சரிக்க வேண்டும்.

கலைஞர் அவர்கள் தேர்தல் ஒலிபரப்பில் "இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்" என்று பேசினார். இதைக் கேட்டவுடன் அவரின் "மனோகரா" திரைப்பட உரையாடலே நினைவுக்கு வந்தது. அதில் மருத்துவன் அரசனின் வாழ்நாளும் நீடித்து, நோயும்நீடித்து, மருத்துவனின் மருத்துவமும் நீடிக்க வேண்டும் என்று கூறுவான். அதேபோல் தில்லி அரசு என்றும் இந்தியைத் திணித்துக் கொண்டே இருக்க வேண்டும், கலைஞரும் அதை என்றும் எதிர்த்துக் கொண்டே இருக்க வேண்டும் எனவே தில்லி இந்தியைத் திணித்துக் கொண்டே இருக்கும். இந்நிலையை எண்ணி நமக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை இன்று ஒவ்வொரு சிற்றூரிலும் இருக்கும் அஞ்சலகங்களில், வானொலியில், தொலைக்காட்சியில் வைப்பகங்களில், தொடர் வண்டித்துறையில்,நடுவணரசு அலுவலகங்களில் இந்தி நீக்கமற நிறையத் திணிக்கப்பட்டுள்ள நிலை கலைஞருக்குத் தெரியாதா? இந்தித்திணிப்பை அடியோடு அகற்றப் போராடுவதற்கு ஆளுங்கட்சியாய் இருப்பதைக் காட்டிலும் எதிர்க்கட்சியாய் இருப்பதே தோதுவானது.

தி.மு.க தம்முன்னுள்ள மிகப்பெரிய பொறுப்பான மேறகூறப்பட்ட தமிழீழத்திற்கான போராட்டம், இந்தித் திணிப்பை அடியோடு அகற்றும் போராட்டம் ஆகியவற்றை நடத்துவதன்மூலம் ஒன்று அ.இ.அ தி.மு.க ஆட்சியின் ஒத்துழைப்பைப் பெறலாம்; அல்லது அவர்கள் யார் என்னும் முகத்திரையினைத் தமிழ் மக்களுக்கு உணர்த்தலாம்.

அதைவிடுத்து தி.மு.க வைப் பொறுத்தவரை அ.தி.மு.க என்னும் முள் மரத்தை இளையதாகக் கிள்ள விடாமல் வேலியாக நின்று நீர் ஊற்றி வளரச்செய்த, போலிப் பொதுவுடைமைக் கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து, வெறும் விலைவாசிப் போராட்டம், கூலி உயர்வுப் போராட்டம் நடத்தி ஏழை எளிய மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து, தி.மு.க தன்னை அழித்துக் கொள்ள வேண்டா. தேசியம் பேசும் எந்தக்கட்சிகளுடனும் கூட்டணி சேர்வது இழிவையே இனிப் பெற்றுக் கொடுக்கும்.

எனவே நாம் கலைஞரைக் கேட்டுக் கொள்வதெல்லாம்,தாங்கள் சுவைத்து விடுத்த தில்லியின் எடுபிடியான முதல்வர் பதவி எண்ணத்தை விடுத்து, இன உரிமை மீட்புப் போராட்டங்களை நடத்தி, நம் தமிழினத்தையும் உலகில் உள்ள பிற நல்ல இனங்களைப் போல அடிமையற்ற மானமுள்ள இனமாக மாற்ற முன்வர வேண்டும். அதன்மூலம் தமிழ் உள்ள உரை தமிழினம் உள்ளவரை அவர் அழியாப் புகழ் பெற வேண்டும் என்ற விருப்பத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இனி தி.மு.க. சார்பில் தேர்தலுக்காகப் பேசப் பட்ட பேச்சுகளில், தி.மு.க வின் தேர்தல் அறிக்கையை ஒட்டித் தமிழ்மொழி, இன, நாட்டு உரிமைகள் இன்று எந்த அளவில் இழிந்துள்ளது என்பதைச் சுட்டி, தி.மு.க ஆட்சிக்கு வந்தால் அது எந்த அளவில் ஏற்றம்பெறும் என்பதாகத் தெளிவுபடுத்தப் படவில்லை.

இந்தி இணைப்புமொழி ஆவதால் தமிழர்கள் எவ்வாறு இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கப்படுகிறார்கள் என்பதைத் சுட்டி, இந்திக்குச் சமமாக இந்தி பேசும் மக்களுக்குச் சமமாக, தமிழும் தமிழரும் ஏற்றம் பெற தி.மு.க எந்த வகையில் போராடும் என்ற திட்டத்தை விளக்கவில்லை.

தமிழ்நாட்டு தேசிய உரிமைகளுக்காகவும், நடுவணரசில் எப்படிப்பட்ட கூட்டாட்சியை தி.மு.க விரும்புகிறது என்பதற்காகவுமான பேச்சுகள் பேசப் படவில்லை.

ஈழத் தமிழர்களுக்கு தி.மு.க ஆட்சிக்கு வந்தால் எந்தவகையில் தனி ஈழத்தமிழ்நாடு காண உதவும் என்ற திட்டங்கள் கூறப்படவில்லை.

பொதுவாகத் தமிழின மேன்மை குறித்த பேச்சுகளைக் காட்டிலும், செருப்பாகத் தேய்வேன் என்றும், கடந்த ஏழாண்டுகளாகத் தண்டித்து விட்டீர்கள் என்றும், தமிழ் மக்களுக்குக் கூறியது, பலருக்கும் குறிப்பாகப் பெண்களுக்குக் கலைஞருக்குத் தீராத பதவி ஆசை அதனால்தான் இப்படிப் பேசுகிறார் என்ற உணர்ச்சியையே தந்தது. மேலும் தேர்தலில் தேர்தல் அறிக்கை சான்ற பேச்சுகளைக் காட்டிலும், ம.கோ. இரா. அவர்களுடைய நோயைப்பற்றியும்,அவருடைய இயலாமையைப் பற்றியும் பேசியது தி.மு.க தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டதற்குச் சமமாகப் போய்விட்டது.

தமிழ் நாட்டிலும் இந்திராவின் இரக்க அலை வீசியது என்பது உண்மையாக இருக்குமானால் அதற்கு முழுப் பொறுப்பும்,குற்றமும் தி.மு.க வையே சாரும். அந்த அளவிற்குத் தமிழ மொழி, இன, நாட்டு உணர்வை,1967-முன் கைக்கொண்டிருந்த உணர்வை தி.மு.க வின் 7 ஆண்டுக்கால ஆட்சியிலோ, அதற்குப் பின் எதிர்க்கட்சியாய் இருந்த காலத்திலோ வீழ்த்த முடியாத அளவிற்கு வளர்த்தெடுக்காத குற்றம் கலைஞருடையதே.

உண்மையான, தன்னலங்கருதாத, தூய மொழி, இன,நாட்டுத் தொண்டை ஆற்றி வந்த தென்மொழி இதழ், இன உணர்வே சிறிதுமற்ற பக்தவச்சலம் காலத்தில் கூட ஆயிரக்கணக்கில் நூலகங்களில் பரப்பப் பட்டு ஆயிரக்கணக்கான உள்ளங்களில் இன உணர்வுத் தீ, சுடர் விட வளர்த்தெடுத்து வந்தது. அந்த உணர்வு வளர்வதென்பது என்றும் கலைஞருக்கும் தி.மு.க. விற்கும் துணை நிற்கும் என்பது எளியோர்க்கும் எளிதே விளங்குவதாகும்.

ஆனால் எந்தத் தமிழின உணர்வால் தி.மு.க ஆட்சிக்கு வந்ததோ அந்தச் சுடர்விடும் தமிழின உணர்ச்சியை அழிக்கும் வகையில், ஆட்சிக்கு வந்த சிறிது காலத்தில் நூலகங்களுக்குச் செல்லும் தென்மொழி இதழைச் சிக்கன நடவடிக்கையைக் காரணம் காட்டி நிறுத்தி விட்டனர். அதற்கு மாற்றாக அடுத்த மாதத்திலிருந்தே பல பார்ப்பன இதழ்கள் புதிதாக நூலகங்களுக்கு வாங்கப்பட்டன.

இதனால் தென்மொழியின் தொண்டு வேகத்தில் பொருள்முட்டுப்பாட்டால் தளர்வேற்பட்டது. போராயக் கட்சியின காலத்திலிருந்து இன்றுவரை தென்மொழி ஆயிரக்கணக்கான நூலகங்களுக்குத் தொடர்ந்து சென்றிருக்குமானால் அது பல்லாயிரக்கணக்கான உள்ளங்களில் மேம்பட்ட தமிழ் உணர்வினை வளர்த்தெடுத்திருக்கும்.

தற்போது தமிழகத்தில் உள்ள சாதி வெறி மத வெறி, இந்திரா அலை போன்ற தமிழினத்திற்குப் புறம்பான அலைகள் அடியோடு அகற்றப்பட்டிருக்கும். கலைஞரும் இப்படி மலை, குன்றாகி இன்று மடுவாகும் அளவுக்கு வீழ்ந்திருக்க மாட்டார். என்ன செய்வது?

எனவே கலைஞர் இனியாவது தக்காரை இனங்கண்டு, தமிழின மேம்பாட்டிற்கான திட்டங்களைத் தீட்டிப்,போராடி,அழிந்து வரும் தமிழ்இன உணர்வை அழியாது காத்து, வளர்த்தெடுத்து வருங்காலத்திலாவது தமிழர்கள் அவர்களுக்குரிய சிறப்பினைப் பெறுவதற்கு வழிவகுப்பார் என்று நம்புவோமாக. 0

வேடிக்கையன்று விடுதலை! வீரம் விளைவிப்பதுவே

பெருமதிப்பிற்கும் உரிய ஐயா வணக்கம்,

நலம் நலமே விளைக

அண்மையில் வெளிவந்த தமிழ் நிலத்திலே போராட்டங்களில் பங்கெடுக்க விரும்பும் மறவர்களின் உறுதிமொழிகளைக் கேட்டிருந்தீர்கள்.

மொழி இன, நாட்டு உரிமை மீட்புப் போராட்டங்களில் பங்கெடுத்துக்கொள்வதை நான் பெருமையாகக்கொண்டு உறுதி கூறுகின்றேன்.

எம் அறிவு, உணர்வு, செயல் அனைத்தும் மொழி இன, நாட்டு உரிமை மீட்பை நோக்கியே இயங்கி வருகின்றன. எவ்வளவுதான் கொள்கை வலிவான இயக்கமாக இருந்தாலும் பொருள் இல்லையென்றால் இயக்கம் வலிமை பெறாது. இதைக் கருத்தில் கொண்டே நான் கடந்த 1979 முதல் இன்றுவரை என் வருவாயில் தொடக்கத்தில் ஒரு மாதச் சம்பளத்தில் இருந்து தற்போது ஓர் ஆண்டில் இருமாதச் சம்பளத் தொகையினை தங்களின் தொண்டு முயற்சிகளுக்குத் துணையாகஅளித்து வந்துள்ளேன். உண்மையில் இதை நான் பெருமைக்குரிய செயலாகக் கருதிக் கொள்ள இயலவில்லை. என்னுடைய ஆற்றாமையை நான் இப்படி வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

ஆயினும் தாங்கள் என்னை அளவுக்கு மீறிப் பெருமைப் படுத்தி,எனக்குக் கழக அருளாளர் என்று சிறப்புப் பட்டம் அளித்து வெளியிடுவது எனக்கு நாணத்தையே தருகின்றது. இத்தகைய தங்களின் பேருள்ளத்திற்கு நம் மொழி, இன, நாட்டை மீட்டு எடுத்து அளிப்பதையே நான் நன்றிக் கடனாகக் கொண்டுள்ளேன்.

சிறிய அளவிலே நல்ல தமிழ் நெஞ்சங்களின் துணைக்கொண்டு மூன்று அல்லது நான்கு மாதங்களில் கோவை மாநகரையே தூய தமிழாக்கிய பட்டறிவைப் பெற்றுள்ளேன். அம் முயற்சி பல் வேறு காரணங்களினால் பிற இடங்களுக்குப் பரவாமல் போய்விட்டாலும் "முயற்சி திருவினை ஆக்கும்" என்ற நம்பிக்கையை ஊட்டியது.

நம் இயக்கம் வளர முழுநேரத் தொண்டுள்ளங்கள் சிலவாவது வேண்டும். அந்த வகையில் தங்களொடு தோளொடு தோள் இணைந்து பணியாற்றும் முன்னணித் தொண்டனாக விரைந்து வரவுள்ளேன்.

— தென்மொழி நா. இளமாறன், பவானி.

அரசியலில் தூய்மையே மக்கள் மறுமலர்ச்சி !

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண் : 51 (27-1-85) பகுதி-1

இலங்கைச் சிக்கலை, இந்தியா உலக ஒன்றியப் பேரவைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்!

இலங்கையில் உள்ள சிங்கள அரசின் கொடுமையால், தமிழினம் நாளுக்கு நாள் அழிந்துகொண்டே வருகிறது. ஒவ்வொரு நாளும் குறைந்தது இருபது தமிழர்கள் சுட்டுக் கொல்லப் படுகின்றனர். பல நூறு இளைஞர்கள் தொடர்ந்து, உயிர்ச்சிதைவால துன்புறுகின்றனர். வீடுகளில் உள்ள இளம்பெண்கள் படைத்துறை வெறியர்களால் ஒவ்வொரு நாளும் தூக்கிச் செல்லப் பெற்றுப் பெண்மையை இழந்து கொலை செய்யப் பெறுகின்றனர். தமிழர்கள் வீதிகளிலும் நடமாட அஞ்சிக் கிடக்கின்றனர். ஒவ்வொரு நொடியும் என்ன நடக்குமோ என்று அஞ்சிய வண்ணம், ஏராளமான தமிழர்கள் தம் பெண்டு பிள்ளைகளுடன் முடிந்த வழிகளிலெல்லாம், தமிழகத்திற்கும், வேறு அயல்நாடுகளுக்கும் சென்று ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றனர். உலக உருண்டையில் இத்தகைய கொடுமைநிலைகள், உயிர்த்துன்பங்கள், வேறு எந்த நாட்டிலும் எந்த இனத்துக்கும் இன்றுவரை நேர்ந்ததில்லை. மாந்தத் தன்மையே அற்ற கொடிய சிங்களவர்களால், நேரும் இத்தகைய அரக்கச் செயல்களை உலகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதுதான் வியப்பிலும் வியப்பாகவும், துன்பத்திலும் துன்பமாகவும் இருக்கிறது. அன்றாடச் செய்தித்தாள்களைப் பார்த்தவுடனேயே ஓர் அவலம் நம் மனங்களைக் கவ்விக் கொள்கிறது. இத் துயரச் சாயல்களுக்கிடையில், வேறு எந்த நிகழ்ச்சியும் நமக்கு மனநிறைவு தருவதில்லை. வேறு எதிலும் மனம் ஈடுபடுவதில்லை. ஐயகோ! இந்த அவலநிலைகள் எப்பொழுதுதான் மாறுமோ, தெரியவில்லையே!

தமிழகத்தில் உள்ள அரசோ, தலைவர்களோ ஏதும் செய்ய முடியாத கையற்ற நிலையில்தானே இருக்கவேண்டி உள்ளது. இங்குள்ள தலைவர்கள் வேண்டுகோள்கள் விடுப்பதைவிட வேறு ஒன்றும் செய்ய முடியாதவர்களாகவே இருக்க வேண்டி உள்ளது. அண்மையில் நடந்த தேர்தலால், திராவிட இனத்திற்கு ஒரு பெரும் தாக்கம் வேறு நேர்ந்துள்ளது. மக்கள் வேறு, தெரிந்தோ தெரியாமலோ, தங்களுக்கு உகந்த ஓர் ஆட்சியைத் தேடிக் கொள்ள இயலாதவர்களாக முற்றிலும் வடநாட்டு இந்தி வெறியர்களையே நம்பித் தங்களை ஒப்படைத்துள்ளனர். நடுவண் அரசில் உள்ளவர்களுக்கோ, இலங்கையில் உள்ள தமிழர்களின் சிக்கலை நேரடியாகத் தீர்ப்பதற்கு மனம் வரவில்லை. பெரிய ஆற்றல் வாய்ந்தவராகத் தம்மை உலகுக்கு அறிமுகப் படுத்திக் கொண்ட, இந்திரா காந்தியோ, தமிழீழச் சிக்கலைத் தீர்க்காமல், பேச்சுரை, தூதுரை என்று ஓராண்டுக்கும் மேல், சிங்களர் கொடுமைகளை எண்ணெய் ஊற்றி வளர்த்தார். என்ன செய்வது? ஆடு, தன்னை வெட்டுபவனையே நம்புவதுபோல், மக்களும் இந்திரா கட்சியையே நம்பி அரசை அதன் கைகளில் ஒப்படைத்துள்ளனர்.

இம் மாதத் தொடக்கத்தில் தலைமையமைச்சர் இராசீவ் காந்தியால் எடுத்த, படகுபிடி நிகழ்ச்சி ஓரளவு ஆறுதல் தந்துள்ளது. அதன் பின்னர் சிங்கள அரசு சிறிதே வளைந்து, தான் சிறைப்படுத்தியிருந்த 17 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவித்துள்ளது. இதுவரை நடந்த கொடுமைகளுக்கெல்லாம், இந்த ஒரு நிகழ்ச்சிதான் ஒருசிறு அளவு நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது. ஆனாலும் காலை ஒடித்ததற்குக் காதைப் பிடித்துத் திருகுவது போன்ற நிகழ்ச்சியே இது. வெறித்தனமும் கொலைத்தனமும் மிகுந்த சிங்கள ஓநாய்களுக்கு இந்த எதிர்ப்பு என்ன உணர்வை வருவித்துவிடும்?

எனவே, இந்தியத் தலைமையமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. இராசீவ் காந்தி, உண்மையிலேயே இதற்கொரு தீர்வு காண விரும்புவாரானால், இச்சிக்கலை உலக ஒன்றியப் பேரவையில் (ஐ.நா.வில்) ஒரு பெருஞ் சிக்கலாகத் தீர்மானம் எழுப்பி முறையிடுதல் வேண்டும். உ.ஒ.தின் அமைதிப் படையையாகிலும் தேவையானால், போர்ப்படையையாகிலும் இலங்கைக்கு

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

(1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

பாடான கருத்துகளைத் தோற்றுவிக்குமோ, அப்படியே வேறுபட்ட பயன்களையும் சிலருக்குப் பயனின்மைகளையுமே தந்து விடும். அந்த வகையில் இத் தேர்தல் முடிவால், சிலர் அளவுக்கு மீறிப் பயன்கள் பெற்றனர்; சிலர் அளவுக்கு மீறிப் பயன்களை இழந்தனர்.

இந்திய அளவில் பெரும்பெரும் தலைகளெல்லாம் தேர்தல் களத்தில் உருண்டன. அவர்களில், சந்திரசேகர் (சனதா தலைவர்), சியார்சு பெர்னாண்டசு, ராம் செத்மலானி, பகுகுணா, கர்பூரிதாகூர், வாச்பாயி (பாரதீய சனதா), மேனகாகாந்தி, சந்திரசித்யாதவ், சென்னாரெட்டி, சுசீலாகோபாலன், சவிதா அம்பேத்கர் முதலானவர்கள் முதன்மையான பெருமகர்கள். முன்னாள் அமைச்சர்கள் பலர் தேர்தல் புயலில் அடிசாய வீழ்த்தப்பட்டனர். சிவசங்கர் (விசைத்துறை), விசயபாசுகரர் (ரெட்டி) (தொழில்துறை), பி. வெங்கடசுப்பையா (உள்துறைதுணை), மல்லிகார்ச்சுன் (பாராளுமன்றச் செயல்துறை), எம் எசு. சஞ்சீவிராவ் (மின்னணுத்துறை துணை), பிரம்மானந்தர் (ரெட்டி), மோகன்தாரியா அந்துலே, சித்தார்த்த சங்கர் ரே கவுசிக் முதலியோர், அவர்கள்.

தமிழ்நாட்டளவிலும், இரா. செழியன், எசு.டி. சோமசுந்தரம், உமாநாத், பாப்பா உமாநாத், பார்வதி கிருட்டிணன், கே.டி.கே. தங்கமணி, ப. நெடுமாறன், ஆசாசெரீப், அன்பில், சிவரதன், சங்கரையா, சி.டி. தண்டபாணி, க. சுப்பு, நெல்லிக்குப்பம் கிருட்டிணமூர்த்தி, ஆலந்தூர் மோகனரங்கம், நல்லசிவம், எசு. அழகிரிசாமி, பி.ஏ. சுவாமிநாதன், எல். கணேசன், அழகர்சாமி, ஆண்டித்தேவர், மாயத்தேவர், வேழவேந்தன், தெள்ளூர் தருமராசன், புலவர். கோவிந்தன், விருதுநகர் சீனிவாசன், சிவசாமி, துரைமுருகன், நாஞ்சில் வின்சென்ட், சன கிருட்டிணமூர்த்தி, எசு எசு. இராசேந்திரன், ஆர்க்காடு வீராசாமி, மு.க. இசுடாலின், முதலியோர் தோல்வி கட்சிகள் சார்ந்த பலருக்கும் பலவகையான அதிர்ச்சிகளைத் தந்தன.

குறிப்பாக, இத் தேர்தலில், இந்திய அளவில் சனதாவும், தமிழக அளவில் திராவிட முன்னேற்றக் கழகமும், யாரும் எதிர்பாராத வண்ணம் படுதோல்வியடைந்தன. தி.மு.க விற்கு, சேலம், தென்னார்க்காடு, பெரியார், நீலமலை, புதுக்கோட்டை ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஓர் உறுப்பாண்மை கூட கிடைக்கவில்லை. அது நிறுத்திய ஏழு பெண் வேட்பாளர்களுமே தோல்வியுற்றனர். தி.மு.க. கிட்டத்தட்ட தொடக்கால அரசியல் நிலைக்கே தள்ளப்பட்டது. கலைஞர் இப் பெருந்தோல்வியைச் சிறிதும் எதிர்பார்த்திருக்க முடியாது.

பொதுவாகவே நம் நாட்டுத்தேர்தல்கள் என்றாலே பற்பல எதிர்பாராத முடிவுகள் ஏற்படுவது இயல்பே. காமராசரையும் அண்ணாவையும் தேர்தல்கள்தாம் தோல்வியுறச் செய்தன. சரண்சிங் கூறியது போல் நம் நாட்டுத் தேர்தல் முடிவுகள்தாம் கற்பனைக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்தாதவை! என்றாலும், தேர்தல் முடிவுகள் என்பது அப்படி ஒன்றும் நம் அறிவுக்குப் புரியாத புதிர்கள் அல்ல. ஆனால் நம் நாட்டு மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எளிதில் மதிப்பிடக் கூடியவர்களே! நம் நாட்டுத் தலைவர்கள்தாம் தங்கள்மேல் அளவுக்கு மீறி நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். அவர்கள் தங்களை அறிந்து கொண்டிருப்பதை விட மக்களை அறிந்திருப்பது குறைவு என்பதையே இத் தேர்தல் முடிவுகள் தெரியப்படுத்தி உள்ளன. அவர்கள் மக்களை இன்னும் ஆழமாக அறிந்து கொள்ள வேண்டும்.

பொதுமக்களின் அறிவை வளர்த்தெடுக்காமல் எந்தக் குடியரசமைப்பும் வெற்றிபெறாது என்பதே பொதுவான மக்களாட்சிக் கொள்கை. இந்தக் கொள்கை மீது இந் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதையே அண்மையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் நமக்குத் தெளிவாகக் காட்டியுள்ளன. ஏன், இனியும் நம் நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு தேர்தலின் முடிவும் காட்டவே செய்யும்

எப்பொழுதுமே, மக்கள் கொடியவர்கள் அல்லர்; குற்றவாளிகளும் அல்லர். ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களைப் போன்றவர்கள் மக்கள். அவர்களுக்கு அறிவூட்டும் ஆசிரியர்கள், தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லையானால், தேர்வுமுடிவுகள் நாம் எதிர்பார்த்தபடி அமைவதில்லை, அம்முடிவுக்கு மாணவர்களைக் குறைகூறிப் பயனில்லை. அது போல் தலைவர்கள் எந்த அளவுக்கு மக்களை அணுகுகிறார்களோ, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறார்களோ அல்லது அறிவூட்டுகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் சரியான பாதையைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அல்லாக்கால் அவர்களுக்குத் தெரிந்த ஒரு பாதையையே கடைப்பிடிக்கிறார்கள். இதில் வியப்பெதுவுமே இல்லை. பயிரை வளர்க்க முடியாத வயல்களில் களைகள் வளரத்தாமே செய்யும். இதுதான் இயற்கையின் நெறிமுறை.

இத் தேர்தலைப் பொறுத்தவரை, நடுவில் இந்திராக் கட்சியும், தமிழகத்தில் அ.தி.மு.கவும் வெற்றிபெறும் என்று உறுதியாக நமக்குத் தெரியும், பலர் இதைப்பற்றிக் கேட்கையிலும், தெளிவாகவே இப்படிக் கூறியிருந்தேன். ஆனால், இவ்வாறுதான் வரவேண்டும் என்பது, நம் ஆசையன்று. எவராவது தாம் கெடவேண்டும் என்று, தாமே விரும்புவார்களா? இருப்பினும், தமிழகத்தில் இந்திரா கட்சி இந்த அளவில வந்தது, பெருங் கொடுமை. இங்கு, இந்திரா பேராயம் வளர்வது தமிழினத்தின் நலிவுகளுக்கே வழி வகுக்கும்,

இந்திரா கட்சிக்கு இந்திய அளவிலும், தமிழக அளவிலும் இந்த அளவு, ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு, பெரும்பான்மை கிடைத்தது. இந்திரா காந்தி மேல் மக்கள் வைத்த பரிவினாலேயே பாசத்தினாலேயே என்பதெல்லாம் முழு உண்மையாகி விடாது. பணத்தின் ஆளுமை அதிகாரத்தின் ஆளுமை, கவர்ச்சிகள், விளம்பர வலிமை, தந்திரங்கள், சூழ்ச்சிகள் இந்து மத வெறி, எதிர்க்கட்சிகளின்மேல் நம்பிக்கை இல்லாமை, மறைமுகமான மிரட்டல்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் நடந்த பொய்யுரைகள், புளுகுரைகள் — ஆகிய இவைதாம் இந்திரா கட்சியின் பெரும் வெற்றிக்குக் காரணங்கள். வேண்டுமானால் இராசீவ் காந்தி இளைஞர் என்பதாலும், அவர்க்கு இந்திராவின் பரம்பரைச் சொத்தாகக் கிடைத்த அவரின் சாய்கால்கள் புகழ் வாய்ப்புகளாலும், அக்கட்சிக்கு மக்கள் அளவற்ற ஆதரவை தந்துள்ளனர். தமிழ்நாட்டில் இந்திரா கட்சிக்குக்கிடைத்த ஆதரவில் பெரும் பகுதி, அ.தி.மு.க.வின் சாய்காலால் வந்த பயன்.

அதேபோல், தமிழகத்திலும், கலைஞர் கருணாநிதிமேல் இன்னும் மக்களுக்கு முழுநம்பிக்கை வரவில்லை என்பதைத் திட்டவட்டமாகவே கூறிவிடலாம். ம.கோ.இரா. வின்மேல் ஏற்கனவே மக்கள் கொண்ட கவர்ச்சி இன்னும் குறைந்தபாடில்லை என்பதுடன், அவ்வாறு ஒரு பகுதி குறைந்திருந்தாலும், அதை, அவருக்குற்ற நோய்க்கடுமையும், தி.மு.க. நடந்துகொண்ட சில அருவருப்பான, தாழ்ச்சியான அணுகுமுறைகளால் மக்கள் அடைந்த வெறுப்பும் ஈடுகட்டிக் கொண்டன என்று கூறிவிடலாம்.

இருந்தாலும் கலைஞர் இந்த அளவிற்குத் தாழ்ந்து போயிருக்கக் கூடாது. கைகளைத் தலைக்குமேலே தூக்கித் கும்பிடுவது போலச் சுவரொட்டி போட்டது; 'ஏழு ஆண்டுகளாகத் தண்டித்து விட்டீர்கள்; அதுபோதும். உங்கள் வீட்டு வேலைக்காரனாக, செருப்பாய் இருந்து உழைப்பேன்' - என்றது; என்னை எப்படியாவது முதல்வராக அமர்த்தி வைத்து விடுங்கள்; எம்.சி.ஆர். வந்தால் அவரிடம் பதவியை நானே ஒப்படைப்பேன் - என்றது; 'அயோக்கியர்களை அகற்றுங்கள்' — என்றது — இவையெல்லாம் அவர் பேசியிருக்கக் கூடாத உரைகள். இவை அவரின் தாழ்வு மனப்பான்மையால் வெளிப்பட்ட, அளவுக்கு மீறியஇரங்கல் உரைகள். இவை அருவருப்பான நடைமுறைகள் என்று அவர் ஏன் உணரவில்லை? இவற்றால் அவரின் புகழ் ஆசைதான், பதவி ஆசைதான் - பளிச்சென்று தெரிந்தனவே தவிர, மக்கள் மேல் அவர் கொண்ட அக்கறை, ஆர்வம் துளியும் தெரியவில்லை. அவர் இந்த அளவுக்கா இழிவான ஒரு தன்மையை அடைந்து விட்டார்? அவரின் பெருமிதம், நம்பிக்கை எங்கே போயின? மக்கள் அவர்மேல் அவநம்பிக்கை கொள்வதற்கு இவையே காரணங்களாக அமைந்து விட்டன. அவருடைய கொள்கைகள் இவற்றால் மிகவும் தாழ்வாகப் போய் விட்டன.

இனி, இத் தேர்தல் முடிவுகள், பலரையும் பலவாறு பேச வைத்துவிட்டன. இந்திரா பேராயக் கட்சிக்கு எல்லாவகை ஊக்கமும் தருவதுபோல், பலரும் தம் கற்பனைக்குகந்தவாறு பேசத் தொடங்கி விட்டனர்.

இந்திரா கட்சியின் பொதுச்செயலாளர், கருப்பையா (மூப்பனார்) ஏதோ தாயே இந்தியாவின் அரசியல் பேரறிஞர்

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் விடுதலை அடைந்தே தீருவோம்!

தொடர்: 6

உலகத் தமிழின முன்னேற்றக் கழகக்

கொள்கை உரவோர் முதல்பயிற்சி வகுப்புத் தொடர்

நிகழ்ச்சிச் சுருக்கம் —

முந்தைய எட்டு நாள்களாக உள்ளமும், கருத்தும், செயலும் ஒருமித்துப்போன உரவோர்களின் ஈடுபாடு மிகு மகிழ்வோடும், எஞ்சிய நாள்குறைவுள்ள நிலையை எண்ணிக்கலக்கத்தோடும் இருந்தன.

28-5-'84-இரவு சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளியார் அவர்களின் அரிய சொலவாய்வுக்குப் பின்னர், திருவாட்டி செந்தாமரை ஆற்றைவன அவர்களின் இனிய எளிய முடிவுரையோடு எட்டாம் நாள் நிகழ்ச்சி முடிவுறவே, ஒன்பதாம் நாள் நிகழ்ச்சி 29-5-'84-அன்று காலை 7மணிக்கே தொடங்கப்பெற்றது.

அன்றைய நிகழ்ச்சி அணைப்பட்டியின் வையைக் கரையை யொட்டி அமைந்த ஆய்வாளர் மாளிகையின் முன்புற நிழலில் காலை வகுப்புத் தொடங்கப் பெற்றது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வெஞ்சிறையில் தம் குடும்பத்தினரோடு அடைபட்டுக் கிடந்த பொதுவுடைமை அரிமா புலவர் கலியபெருமாள் அவர்கள் அன்று விடியலே வந்திருந்து வகுப்புப் பயிற்றுநராகக் கலந்து கொண்டார்கள். அவரோடு திருச்சி முற்போக்கு இளைஞர் அணியின் சார்பில் தோழர் அரசேந்திரனும் வந்திருந்தார்.

முதல் நிகழ்ச்சியாக, கழக முதல்வர் வாழ்வியல் தொடர்பான பொது உண்மைகளையும், மனவியல் ஆற்றலையும் விளக்கப்படுத்திப் பேசினார்கள். கற்பனை என்பது அறிவு நிலைக்கு முந்து நிலை என்றும், கற்பனை செய்துதான் ஒவ்வொருவரும் தம் அறிவைப் பெருக்கிக்கொள்ள இயலும் என்றும், அவ்வறிவு நிலையில் வெறுப்பும் இருத்தல் கூடாது, தெய்வும் இருத்தல் கூடாதுஎன்பதாகவும் விளக்கப்படுத்திவிட்டு, மனநலம், உடல் நலம், வாழ்வு நலம், அறிவு நலம் என, பல நலங்களையும் பேணிக் காத்தல் வேண்டும் என்றும் விளங்கக் கூறிவிட்டு, ஒவ்வொருவரின் தனி இயக்க நிலைகளையும், சார்பு இயக்க நிலைகளையும் விளக்கப்படுத்தினார்கள்.

கழக முதல்வரின் பொழிவிற்குப் பின்னர் காலைச் சிற்றுண்டி படைக்கப்பெற்றது. அன்றைய காலை வகுப்பிற்குத் திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார் தலைமை ஏற்றுப் பயிற்சி வகுப்பின் முகாமைத் தேவையையும், தென்மொழி அன்பர்களின் குடும்பவியல் ஈடுபாடுகளை மதித்தும் உரையாற்றினார்கள். வகுப்பிற்கு வந்திருந்தாரை திருவாட்டி இறை - பொற்கொடி அவர்கள் அகக்குளிர்ச்சியோடு மட்டுமல்லாமல உணர்வெழுச்சியோடும் வரவேற்று அமர்ந்த பின், 'வாழ்வறிவியல்' எனும் அறிவியல் தொடர்பான அருந்தலைப்பில், தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் சொல் தொகுப்பாளர் திரு. மா. பூங்குன்றன் கா. மு. அவர்கள் உரையாற்றினார்கள். அறிவியல் தொடர்பான இவ்வகுப்பை மிக எளிமையாகவும் தேவையான அடிப்படையான அறிவியல் வளர்ச்சிலைச் சுட்டியும் விளக்கப்படுத்தியது வியத்தற்குரியது. அவரைத் 'தொடர்ந்து பாவலரேறு அவர்களின் இசைப் பாடல்கள் எனும் தலைப்பின் நெடுநாளைய தென்மொழி அன்பரும், புரக்குநரும் ஆகிய, திரு. தென்மொழி இளமாறன் (பொறியாளர்) அவர்கள் சொற்பொழிவாற்றியதோடு பாவலரேறுவின் சில பாடல்களையும் இசைத்துப் பாடினார்.

அடுத்து, உலகத் தமிழராய்ச்சி நிறுவனப் பேராசிரியரும், நெடுநாள் தென்மொழியன்பரும் ஆகிய பர். அரசேந்திரன் அவர்கள் 'பாவலரேறு அவர்களின் பாடல்கள்' என்பது பற்றி அரியதோர் உரையாற்றினார்கள். வெறுமனே பாடல்களைத் திறனாய்வு செய்வதோடு நில்லாமல் இக்கால இழிவரசியல் 'நாடகங்களை' விளக்கிக் குமுகாயஅமைப்பின் விடிவு பற்றி விளக்கியுரைத்தார்க்ள். அன்றைய காலை நிகழ்ச்சி செல்வி மா. பிறைநுதல் அவர்களின் நன்றியுரையுடன் முடிவுற்றது.

அன்றைய பிற்பகல் வகுப்பு 3மணிக்குத் தொடங்கப் பெற்றது. தென்மொழியன்பர் திரு. தமிழ்நெஞ்சன் தலைமை தாங்கினார். பொழில்வாய்ச்சி திரு. தென்னவன்கோ, நிகழ்ச்சிக்கு வந்திருந்தார் அனைவரையும், வரவேற்றமர்ந்தபின், 'மருத்துவ முறைகளும் மக்கள் நிலையும்' எனும் அருந்தலைப்பின் கீழ் உ. த. மு. க. வேடசந்தூர் வட்டச் செயலர் திரு. கல்லை அருட்செல்வன் அவர்கள் நெடியவுரையாற்றினார்கள். தம் வாழ்க்கையில் பயன்படுத்திக் கண்டுணர்ந்த அனைத்து மருத்துவ நிலைகளையும் அமைப்புகளையும் விளக்கி உரையாற்றினார். 'யுனானி', 'ஆயுர்வேதம்', ஓமியோபதி', சித்த மருத்துவம், ஆங்கில மருத்துவம் இவற்றின் வேறுபாடுகளையும் கூறுபாடுகளையும் மாறுபாடு இல்லாமல் கூறிய விளக்கங்கள் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளப் பெற வேண்டியனவாகும்.

அவரை அடுத்து தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மா. இலெ.) யின் தலைவர் புலவர் திரு கலியபெருமாள் அவர்கள் ஏழை உழவர்களின் சிக்கல்களை விளக்கியும் தேசிய இன விடுதலையை ஆதரித்தும் மாலை 5-30 மணிவரை ஏறத்தாழ ஒரு மணி நேரம் உரையாற்றினார்கள். அவர் கூறிய மார்க்சிய விளக்கமும், தேசிய இன விடுதலையின் தேவையும் அனைவராலும் கேட்கப்பட வேண்டியவை. இளைஞர்களுக்கு அவை புத்துணர்வூட்டின.

அன்றைய நிகழ்ச்சி அத்துடன் முடிக்கப்பெற்று, மாலை 6-30 மணியளவில் உரவோர்கள் அனைவரும் அணைப்பட்டி நடுநிலைப்பள்ளிக்கு அருகில் நடக்கவிருந்த பொதுக்கூட்டத் திடலுக்கு ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தில் தமிழ்த்தேசிய இன விடுதலையை வலியுறுத்தி விடுதலைமுழக்கங்கள் விண்ணைப் பிளந்தன.

கூட்டம் சரியாக 7-30 மணியளவிற்குத் தொடங்கப்பெற்றது. கூட்டத்திற்குக் கொள்கை பரப்புச் செயலர் புலவர் தமிழ் மாறன் தலைமை தாங்கித் தமிழ் நிலம் எவ்வெவ் வகையிலெல்லாம் புறக்கணிக்கப்படுகிறது என்கிற உணர்வுரையாற்றிய பின்னர் பல்லடம் மா. ஆறுமுகம் அவர்கள் அனைவரையும் வரவேற்றமர்ந்தார்.

திரு. வியனரசு, திரு. மா. பொழிலன், திரு. மா. செ. தமிழ்மணி, திரு. தாரை- தமிழ்வென்றி, திரு தென்மொழி, ப. துரையரசன், புலவர் திரு. இனநலவேந்தன், ஆகியோரின் உணர்வுரைக்குப் பின்னர் திருச்சி முற்போக்கு இளைஞர் அணிசார்பில் திரு. இராசேந்திரன், உரையாற்றினார். திருவாட்டி- இறைபொற்கொடி உரைக்குப் பின்னர் உ. த. மு. க. துணைப்பொது செயலர் திரு. தென்னவன்கோ. கழகத்தின் இன்றியமையாமையையும் தேவையையும் விளக்கப்படுத்திப் பேசினார். அவரைத் தொடர்ந்து புதுவை மாநில உ. த. மு. க. அமைப்பாளருமாகும், சொல்லாய்வறிஞருமாகிய தமிழூர் ப. அருளியார் தமிழினத்தின் ஒட்டு மொத்த வீழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டினார். பின்னர் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சித் தலைவர் புலவர் கலியபெருமாள் உழவர்கள் சிக்கல் தொடர்பாகவும், தேசிய இன விடுதலையை வலியுறுத்தியும் அவ்வகையில் தமிழ்நாட்டை மீட்டெடுப்பது எங்ஙனமென்றும் விளங்கப் பேசினார்கள். அவரைத் தொடர்ந்து கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழினம் வீழ்த்தப்பெற்ற நெடிய வரலாற்றைச் சுருக்கமாக் வெளிப்படுத்தியும், அவ்வகையில் மாற்றுத் தீர்வு எத்தன்மையது என்றும் ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் இரவு மணி 12-30 வரை நெடிய உரையாற்றினார்கள். திரு. இளமாறன் நன்றி நவில, கூட்டம் இனிது முடிவுற்றது. அவ்வூர் மக்களுக்கு அதுபோலும் ஒரு நிகழ்ச்சி மிகவும் புதியதாகையால், உள்ளூர் மக்கள் பெரிதும் விரும்பிக் கேட்டது குறிப்பிடத் தக்கது.

கூட்ட முடிவோடு அன்றைய வகுப்பு மன நிறைவோடு முடிவுற்றது. இறுதிநாள் வகுப்பை எண்ணி மனத்துயரோடு உறவோர்கள் அனைவரும் அமைந்து உறங்கச் செல்லும் முன்பு ஐந்தாம் நாள் சித்தர் குன்றம் சென்று நடப்பெற்று வந்த கழகக் கொடியினைக் கண்ணுறுவதாய்எண்ணி இருளில் குன்றத்தை நோக்கி ஆற்றுப்படுகையில் பேசித்திரிந்தனர்.

குறிப்பிட்ட கழக வினையாளரும் புரக்குநர்களும் அன்று இரவு 2-30 மணி வரை தென்மொழி, தமிழ் நில வளர்ச்சிக்கான முக்கொடைத் திட்டம்' பற்றி உரையாடிவிட்டுப் படுக்கச் சென்றனர். (தொடரும்)

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் முன் இசைவுபெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அமைச்சர்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி :

ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு

தொடக்கக் கூட்டமும், வாழ்நாள் சிறையாளிகளை விடுவிக்கக்கோரிய பொதுக் கூட்டமும்!

நிகழ்ச்சிச் சுருக்கம்

திரு. அச்யுத் யக்னிக் அவர்களின் ஆங்கிலப் பேச்சை அவரை அடுத்து 'மார்க்சியம்இன்று' சிறப்பாசிரியரும், நெடுநாளைய பொதுவுடைமைச் சிந்தனையாளருமாகிய திரு. ச. ந நாகராசன் அவர்கள் பொதுவுடைமை இயக்கங்களின் பின்னடைவுகளையும், நெகிழ்வுகளையும் சுட்டிக்காட்டியதோடு, செயல்பாடுகளில் இக்கூட்டமைப்பு செயல்படவேண்டிய நிலையினையும் சுருங்கக் கூறினார்.

அவரையடுத்துப் பெரியார் சமஉரிமைக் கழகத்தைச்சார்ந்த திரு. சோ. யுவராசன் அவர்கள் தமிழ்த்தேசியத்தில் உள்ள முற்போக்கு இயக்கங்களின் பிற்போக்குத் தன்மைகளை விளக்கியும், திராவிட இயக்கங்களின் முழுமையற்ற செயல்பாடுகளைச் சுட்டிக் காட்டியும் உரையாற்றிய பின்னர், மக்கள் சன நாயக உரிமைக் கழகத் தலைவரும், வழக்கறிஞருமாகிய ஏ. எம் இப்ராகிம் தம உரையில் சிறையில் நடக்கின்ற கொடுமைகளைச் சுட்டிக் காட்டிப், பீகார் சிறையில் 45 சிறையாளிகளுக்கு கண்ணில் எரியன் (அமிலம்) களை ஊற்றிக் குருடராக்கிய நிலையைக் கூறியதோடு தாய் அன்பு எந்த அளவில் உயர்ந்ததோ ஆழமானதோ அந்த அளவில் தாய் நாட்டுணர்வும், தாய் மொழியுணர்வும் ஆகும். அதை விடுத்துப் போலியாகப் பொம்மை வடிவால் அமைக்கப்பெற்ற இந்தியத் தாயைப் பார்த்து இதுதான் தாய் இதை வணங்கு என்றால், எவருக்கும் உண்மையான தாயன்பு பற்று வரவே முடியாது என்று வீறுகொண்டு பேசி அமர்ந்த பின், மக்கள் பண்பாட்டுக் கழகத்தைச் சார்ந்தவரும், புதுப் பாவலருமாகிய திரு. இன்குலாப் தம் உரையில் ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு இது. இதில் அவரவர் சொந்த விருப்பு வெறுப்புகளை, உணர்வுகளைக் கொள்கைகளை அள்ளி வீசக்கூடாது என திரு. இப்ராகிம் பேசிய பேச்சிற்கு மறுப்புரையாகக் கூறி முடிந்தபின் தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர் விடுதலை இயக்கத்தின் சார்பில் திரு. ஆர். கே. சுவாமிநாதன ஏழை, பணக்காரன் என்று மட்டும் அன்று, முதலாளி-தொழிலாளி என்ற வேறுபாடு மட்டுமன்று இந்த நாட்டில் சாதிய அமைப்பிலேயே ஏற்றத் தாழ்வு நிலைத்துவிட்டது என்றும், தனி நாட்டைப் பிரிப்பதினால் பிற மாநிலங்களில் உள்ள தாழ்த்தப்பட்டோரோ, பழங்குடியினரோ, விடுதலையடைய வாய்ப்பே இருக்காது, என்றும் கூறி அமர்ந்தபின்னர், தமிழக மக்கள் முன்னணியின் சார்பில் திரு. நடராசன் அவர்கள் தம பேச்சில் காவல்துறையின் அட்டூழியங்களைப் பற்றிப் விரிவாக எடுத்துக் கூறியதோடு ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பின் தேவைபற்றி விரிவாகக் கூறினார். அவரை அடுத்து மக்கள் உரிமைக் கழகத் தலைவர் பி வி. பக்தவச்சலம் அவர்கள் பேசுகையில் வழக்குத் தொடர்பாக இந்திய நாட்டில் உள்ள பிற்போக்குத் தனங்களைக் கண்டித்துவிட்டு, இந்நாட்டில் தலைமை அமைச்சர், மக்கள் தலைவர் (President), ஆளுநர் (Governor) ஆகியோர் என்ன கொடுமையான கெடுதல் செய்தாலும் அதற்கு அவர்கள்மீது வழக்குப் போட முடியாதபடி ஒரு புதுச் சட்டத்தை உருவாக்கியிருப்பதையும், குண்டர்கள் சட்டத்தையும் சுட்டிப் பேசியபின், உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அனைவரும் மீண்டும் பேசவேண்டுமென்று கேட்டுகொண்டதன் பேரில், பேசுகையில் ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பின் தேவையையும், அதன் செயல்பாட்டின் இன்றியமையாமையையும் குறிப்பிட்டுவிட்டு, நாம் அனைவரும் செயல்பட இணைந்து விட்டோம் இனிச் செயல்தான் எச்சமாக உள்ளது என்றும் விளக்கமாகச் சிறிதுநேரம் ஒற்றுமையை வலியுறுத்திக் பேசி - முடித்துக்கொண்டார்கள். இறுதியில் இரவு 11-30 மணியளவில் இக்கூட்டமைப்பின் செயலாளர் திரு. பரமேசுவரன் கூட்டமைப்பின் தீர்மானங்களைப் படித்து அனைவரையும் ஒருமித்த கையொலிகளுக்கிடையில் நிறைவேற்றியபின், நன்றியுரை கூறி, நிகழ்ச்சியை இனிதே முடித்தார்கள்.

— நம் சிறப்புச்செய்தியாளர்

வடக்குக் காற்று தமிழர்க்கு ஆகாது!

தொடர் : 2

இந்திரா சாம்பல் தடுப்பு வழக்கில் உயர் அறமன்ற நடுவரின் தீர்ப்புரை!

4. சட்டநெறிமுறைகளைக் கொண்டு, முறையீட்டாளரான பகுத்தறிவாளரின் கருத்துகளை வழக்குமன்றம் சுருக்கமாகக் கீழே கொடுக்கிறது.

(1) மாந்த உடல் சாம்பல் அனைத்தும் ஒரே தரத்தினதே. அவற்றில் எவ்வகை உயர் குணமோ, பண்போ இல்லை. அந்நிலையில் மறைந்த இந்திரா காந்தியார் அவர்களின் உடல் சாம்பலுக்கு உயர் மதிப்புக் கொடுப்பதோ, அச் சாம்பலின் தன்மையை உயர்வுபடுத்திக் காட்டுவதோ தவறானதாகும்.

(2) அச் சாம்பலைத் தூக்கிக்கொண்டு இந்தியா முழுவதும் செல்வதற்கு எவ்வகை எதிர்ப்பும் செலுத்தாமலும், முறையாக, அமைதியாக அடக்கம் செய்யும் முறையையோ, உடலை எரிக்கும் நிலையையோ வளர்க்காமலும் அரசு இயங்குகின்றது.

(3) மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தித் தலைவர்களின் உடல்சாம்பலை இந்தியாவெங்கும் எடுத்துச் செல்லலாம் என இதுநாள் வரை அரசு எவ்விடத்தும் குறிப்பிட்டிருக்கவில்லை.

(4) எரியூட்டப்பட்ட மாந்த உடலின் சாம்பலுக்கு மிகவும் முகாமைத் தன்மை கொடுப்பது என்பது இந்துக்களின் மூட நம்பிக்கைகளிலேகூட புதுமையான மாறுபாடாகும். மேலும் மறைந்த இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் உடல் சாம்பலை மக்கள் பார்வைக்காக அரசே ஏற்பாடு செய்கின்ற மூடப்பழக்கமான நிலையை வைத்துப் பார்க்கும் பொழுது, இவ் வரசு இந்துக்களின் பழக்க வழக்கத்திற்காகவும், வழிபாட்டிற்காகவுமே தம்மை ஒப்படைத்திருப்பதாகத் தெரிகிறது.

(5) இதுபோலும் ஓர் அதிர்ச்சி தரக்கூடியதும், சிந்தனையை மாற்றக் கூடியதுமான கருத்துகள் அடங்கிய வழக்கை 'நீக்கப்பெற்றது' (தள்ளுபடி செய்யப்பெற்றது) எனும் சொல்லைக் குறிப்பிடுகிற நிலையில் தீர்ப்புரையைக்கொடுப்பது என்பது வீணானதாகவும், அச் செயலைத் தடுத்து நிறுத்த அரசை எதிர்த்து வழக்காடுகிற நிலை முடிந்துவிட்டதாகவும் அமைகிற வகையில் அச்சாம்பல், இந்திரா அம்மையாரின் இறுதி ஆவலை நிறைவேற்றும் முகத்தான் இமையமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் மாந்தத் தன்மை மீது மதிப்பற்ற இம் முறையீட்டாளரின் இழிவான செயலுக்கு வலுவான மாறுதலை எவராலும் செய்துவிட முடியாதானாலும், முறையீட்டாளர் தொடுத்த வழக்கின் கருத்துகளை விளக்கப்படுத்தி அவற்றின் தன்மைகளைக் கூறி மாறுதலான முடிவை வழங்கவுள்ளேன்!

(6) இறந்த உடலங்களை ஒவ்வொரு மதமும் தத்தம் நடைமுறைப்படி இவ் வியற்கையின் மடியில் திருப்பக்கொடுக்கின்றன. அவ்வகையில் எரித்தல், பாதுகாத்தல், புதைத்தல், பறவைகளுக்கும் மீன்களுக்கும் உணவாகும் பொருட்டு நீர் வழிச் செலுத்தல் முதலிய நடைமுறைப் பழக்கங்களால் உடலங்களை இந்நிலத்தாயின் வயிற்றுள் மீண்டும் செலுத்துகின்றனர். ஆனால் இறப்பு உடலங்களைக் கடத்துகிற நிலை எவ்வகையினதாயினும் எல்லா மதங்களும் அவ்வுடலங்களின் கடைசிப் பகுதியானது எவ்வகையிலேனும் கரைபடுகிற நிலை வரை அப் பகுதிக்கு மிகுந்த மதிப்பும், வணக்கமும், நம்பிக்கையும் கொடுத்து இயங்குகின்றன. இவ்வகை நிலை இந்து மதத்தில் மிகுதியாக உள்ளது. இறப்பு உடலங்களை எரிக்க இறைவனே கட்டளை கொடுத்ததுபோன்று நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அவ்வகையில் எரிக்கப்படுகிற உடலங்களின் எச்சமாகத் தங்குவது தான் எலும்புகளும் சாம்பலும். ஆனால் அத்தகைய எச்சங்கள் குறிப்பிடப்பெறும் அளவுக்கு உயர்ந்தவையா அல்லது தகுதி சான்றவையா என்றால் அது குழப்பத்திற்குரிய ஒரு கருதுகோளேயாகும்.

(7) சிந்தனையாளரான முறையீட்டாளர், மெய்ந்நிலையினர், போலிமைக்கீழ்த்தரத்தினர்; உயர்நிலையினர், வாழ்க்கையடிப்படையற்றவர்; அறிவு முதிர்ச்சி கொண்டோர், அவ்வளர்ச்சியற்றவர் என்பன போலும் வேறுபட்ட மக்களியல் எண்ணங்களை ஆய்ந்து பார்க்கத் தவறியுள்ளார். இந்நிலையை உயர் நோக்கில் பார்ப்போமேயானால் எரிக்கப்பட்ட உடம்புச் சாம்பல் என்பது வெறும் சாம்பலாக மட்டும் இல்லாமல், மதிப்பிற்குரிய நிலையிலும், ஆழ்ந்த அன்பு நிலையிலும் பிரிந்த உயிரின் நினைவான நினைவுப் பொருளாகவும் உள்ளது விளங்கும். மாந்த இயல்பற்ற, கீழ்த்தரமான நிலையிலிருந்து பார்ப்போமேயானால் அச் சாம்பல் முழுமையும் மாந்த உடல் எரிந்து கிடைத்த எலும்புச் சாம்பலைத் தவிர்த்து வேறு எவ்வகைச் சிறப்பும் அற்றது என்றே கூறத் தோன்றும். மேலும் அவ் வகைச் சாம்பலின் உயர் தன்மை என்பது தம்முடைய நெருங்கிய, இணையுள்ள உறவினர் இறந்துபட்டுப் புதைத்தோ, எரித்தோ கிடைக்கக்கூடிய நினைவுப்பொருள் வழியேதான் உணரமுடியும்! அத் தன்மையை மனநோயுற்ற உள்ளத்தினர் உணர இயலாது. இறைமைத் தன்மைக்குப் புறம்பான நிலை முறையீட்டாளரின் கண்களை மங்கவைத்தும், சிந்தனையைக் குறுக்கப்படுத்தியும் வைத்ததோடு தொடர்ச்சியான சிந்தனையைத் தடையும் செய்து, அறிவு என்கிற பெயரைச்சொல்லிக் கொண்டு அச்சாம்பலில் பயனில்லை, அது எதையும் புலப்படுத்தவில்லை என்றும் கூறுவது சரியானதன்று.

( ) இவ்வகையில் பெரிய தலைவர்களைப் பொறுத்த வகையில் நாம் எண்ணிப் பார்ப்போமேயானால், அவர்களின் தொண்டும் பணியும் என்றும் மறையாமல் இவ்விந்திய ஆண், பெண்களின் உள்ளங்களில் உறைந்து கிடக்கின்றன; அழிக்க முடியாத வார்ப்பாக உள்ளன. இவ்வுண்மைகளின் அடிப்படையில் அவர்களின் அழியாப்புகழ்ச்சாம்பல் வடிவத்தில் மதிப்பையும், வணக்கத்தையும் வேண்டி இருக்கிறது. எனவே அச்சாம்பல் வேறு சிறப்புத்தன்மை கொண்டதன்று, அதை மக்கள் மந்தை போல் சென்று பார்ப்பது சரியானதன்று என்று எண்ணுவது தவறானதாகும்: அதில் அடங்கியுள்ள உண்மை என்னவென்றால் சாம்பலைப் பார்க்கிற கோணத்தில் மக்கள் இறந்த தலைவரின் மூகத்தையும், உடலையும் வடிவமைத்துக் கொள்கின்றனர். தாங்கள் நேரில் கண்ட கடந்த வரலாறுகளை, நெருப்பினால் கொளுத்தப்பட்ட உடல் சாம்பல் வழி கண்டு நிறைவடைகின்றனர். அவர் இறந்த இடத்தை நிறைவுசெய்ய இயலா நிலையில் அழியாப் புகழை அதோடு இணைத்துக் காண்கின்றனர். முறையீட்டாளர் இதே கோணத்தில் தம் கருத்தை வலுப்படுத்திக் கூறுவாரேயானால் முட்டாள்தனம் என்பது இறந்து எரிக்கப்பட்ட சாம்பலைக் கண்டு அதோடு தம்மை இணைத்து வருத்தப்படுகிற மாந்தச் சந்தைகளின் உள்ளத்தில் இருக்காது; மாறாக அளவுக்குட்பட்ட எதிர்நிலை எண்ண, சிந்தனைகளைக் கொண்டவரிடத்தே அடங்கும். எனவே இச் சிந்தனைகளின் அடிப்படையில் பார்ப்போமேயானால் முறையீட்டாளரின் முதல் கருத்தானது நீக்கப்படுவதற்கான, தள்ளுபடி செய்யப்படுவதற்கான முழுமையான தகுதிவாய்ந்ததாகும்.

(9) முறையீட்டாளரின் இரண்டாவது, மூன்றாவது கருத்துகள் முடிவுக்காக இணைத்து எடுத்துக் கொள்ளப் பெறுகிறது. முறையீட்டாளர் அளித்த இக் கருத்துகளின்படி அடிப்படைப் பிழை என்னவென்றால், அவர் பார்வையில் இந்தியப் பெருநிலத்துல், உலகிலேயே மிகுந்த மக்கள் தொகை கொண்ட மக்களாட்சி நிலத்தில் மக்களின் விருப்பு வெறுப்புகளை எண்ணி அவற்றிற்கு மதிப்பு கொடுக்கவில்லை என்பதேயாகும். துன்பம்சூழ எந்த நேரத்திலானாலும் நாட்டுத்தலைவர் இறக்கநேரிட்டால் மக்களிடையில் வருத்தம் மேலிட்டு உள்ளெழுச்சியோடு அதை வெளிக்காட்ட ஏக்கம் இருக்கும். அந்நிலையில் அத் தலைவர் இறந்த இடத்திற்கு அருகில் உள்ள மக்கள் தவறாமல் அத்தலைவரின் இறுதி நிகழ்வுகளில் பங்கு கொண்டு, அழியாப் புகழினருக்கு வணக்கம் செலுத்தும் பொழுது நெடுந்தொலைவில் உள்ள பிறர் அங்ஙனம் செய்ய இயலாமற் போய்விடுகிறது அந்நிலையில் இறுதிஊர்வலத்தில், அதன் நிகழ்வுகளில் கலந்துகொள்ள இயலாமல் ஏமாற்றத்தையும், மிகுதுயரையும் கொண்ட அம் மக்களுக்கு இதுபோலும் சாம்பலைப் பல முகாமையான நடுவங்களுக்கு எடுத்துச் சென்று காட்டுவது சிறிது துன்பத்தைக்குறைக்கமுடியும் என்பதே இச்செயலின்நோக்கமாகும். இவ்வழக்கச்செய்வதில் மக்களிடம்மனநிறைவை உண்டு பண்ண இயலும் என்கிற வகையில் அரசு இதைச் செய்தது. மாந்த மெய்ம்மமே நன்றி மறத்தல் எனும் பெரும் கரிசை (பாவத்தைச்) செய்யாமல் இருப்பதேயாகும். திருவள்ளுவ முனிவர் குறிப்பிடுவது போல :

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

—எனவே நன்றி மறப்பது நன்றன்று. அவ்வகையில் இம் மக்களரசும் அந் நேரத்தில் மற்றெதையும் பொருட்படுத்தாமல் மக்களின் விருப்பப்படி, தேவைப்படி இச்செயலைச் செய்தது. இவ்வகையில் அரசுப் பணம் என்பது மக்களின் பணமே. எனவே அரசு சரியான, பயனுள்ள வகையில் அத்தலைவரின் தூய (புனித) சாம்பலை இந்நாட்டு மக்களிடம் கொண்டுவந்து காட்டுவது நல்லது மட்டுமன்று; அதன் கடமையும் ஆகும்.

(10) முறையீட்டாளர் தமது கடைசிக் கருத்தாக, சாதி மத வேறுபாடற்ற நாட்டில் ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு அதிக சலுகைகள் வழங்கி வரவேற்பது சரியற்றது என்றும், அவ்வகையில் இந்து மதம் இடம் பெறுகிறது என்றும் குறிப்பிடுகிறார். இவ்வகையில் முறையீட்டாளரின் கருத்து பெரும் வீழ்ச்சிக்கு உட்பட்டுள்ளது. பொதுவான பார்வையில், 'Secular' - என்ற சொல்லுக்குப் பொருள் : "இவ்வுலகிற்குரிய; உலகியல் சார்ந்த; சமயஞ் சாராத; திருநிலையற்ற; திரு மடச்சார்பற்ற; பொது நிலை வாழ்விற்குரிய; சமய மெய்ம்மங்களில் உறுதிப்பாடற்ற; என்பதாகும். Secular State - என்பதற்கு 'மதச் சார்பற்ற' என்பதேயல்லாமல் 'மதமற்ற, என்பது பொருளன்று. இவ்வகையில் பார்ப்போமேயானால் எந்தத் தனியொரு மதத்தோடும் அரசு தம்மை இணைத்துச் செயல்படவோ, அதை நடுப்படுத்திச் செயற்படுத்தவோ இல்லாமல் எல்லா மதத்திற்கும் நிகரான, பொது மதிப்பைத் தருகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் 15-ஆம் நெறிப்படி பார்ப்போமேயானால் இந்நாடு மதம், இனம், சாதி, பால், இடம், பிறப்பு ஆகிய எவ்வகை வேறுபாடு நிலைகளையும் எதிர்த்து, அவற்றைக் கடந்து இயங்க வேண்டும் என்பதாகும். அவ் வழியே இவ்வரசு பல பிரிவுகளைக் கொண்ட மக்களிடம், அவரவர்கள் தத்தம் மதத்தில் உயர்வடையவும், அதை வளர்க்கவும் இசைவு தருகிறது எனவே இந்த நடைமுறைப்படி இந்நாடு மிக அமைதியுடனும், வருத்தத்துடனும் இழந்த தலைவரின் இறுதிச் செலவை அவருக்குக் கொடுக்கும் மதிப்பில் சிறிதும் குறைக்காமல் அவர் சார்ந்த மதத்தின் வழியே செலுத்தி ஊர்வலத்தை நடத்தியது. அவ்வகையில் மதச் சார்புடைய நிலையில் செய்வது போன்று தம் சட்ட நெறிமுறைகளை எவ்வகையிலும் வேறு கற்பனைக்கிடமின்றி, தளர்த்திக் கொள்ளாமல் அம்மதிப்பை அளித்துள்ளது அரசு. எனவே முறையீட்டாளரின் முரண்பாடான முறையீடு, தவறான எண்ணத்தின் அடிப்படையானதே தவிர வேறன்று. எனவே இக் குழப்பமான கருத்தும் தள்ளுபடி செய்வதற்குத் தகுதி வாய்ந்ததாகிவிட்டது.

(11) தம்மைத்தாமே எதிர்பாரா நிலையில் பகுத்தறிவாளர் என முன்னிறுத்திக் கொண்ட முறையீட்டாளர், அரசைக் குற்றப்படுத்தி எதிர் தரப்பினர்கள் பகுத்தறிவற்றவர்கள் எனக் குறைகூறித் தம் முறையீட்டைப் பதிந்துள்ளார். இவ்வகையில் பெரும்பாலான கற்றவர்களும் தவறுசெய்கின்றனர்; கற்றது கையளவு, கல்லாதது கடல் அளவு என அவர்கள் எண்ணுவதில்லை. எனவே ஆழ உழுது அறிவுக் கடலை ஆய்ந்து கொண்டிருப்பதை, குறைவான அளவே உழ நேரிட்டுக் குறிப்பிட்ட கல்வி அறிவே கொண்ட நிலையில் காணுதல் கடினம். எனவே இம் முறையீடானது தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆனால் அம்முடிவான சொல்லைச் சொல்லுவதற்குமுன்பாக முறையீட்டாளர் மிகுத்தந்திரமான முறையில் தாமும் இறந்த தலைவர்க்கு இறுதிவணக்கம் செலுத்திஇருப்பதையும்குறிப்பிட விரும்புகிறேன் ஒரு சில நாடுகளே இவ்வுலகில் இத் தகு கொடுமையான வருத்தச் சூழலில் ஒரு குடிமகன் இங்ஙனம் பணத்தையும் சட்டத்தையும் குறைகூறிப் பொருளற்ற வரட்டுக் கத்தல் கத்துவதற்கு இடம் அளிக்கின்றன. அவ் வகையில் நம் நாட்டைப் பொருத்தவரை, காந்தி, சவகர்லால்நேரு, மற்றும் முகாமைத்தலைவர்கள், இச் சட்டத்தை நமக்களித்த தந்தைகள், நாம் இழந்த இந்தியத் தலைமை அமைச்சர் ஆகியோர் நமக்கு மாறுதலுக்குட்பட்ட ஒரு மக்களியல் ஆட்சியைக் கொடுத்ததோடு. இதுபோலும் சட்டம் என்கிற அடிப்படையில் வழக்குமன்றத் தீர்ப்பை நோக்கிக் கொடுக்கப்படுகிற முறையீடுகளை எவ்வகைத் தடுப்பும், தடையும் அளிக்காமல், பொருளற்ற கருத்துகளையும் ஏற்று, அவற்றிற்கு விடையளிக்கவும் செய்திருக்கின்றனர்.

இவ்வகை விளக்கமான சிந்தனைகள்வழி முறையீட்டாளர் தற்பொழுதைய சூழலைக் குறைந்தஅளவு விளங்கியேனும் கொள்வார் எனக் கருதுகிறேன்; அவ்வகையில் நான் அவர் கூறியவற்றை மறுத்து, அந்த முறையீட்டுவழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்.

ஒப்பம் :
(மகாதேவன் வெங்கட்டராமன்)
— துணைப்பதிவாளர்
ஒப்பம்
இணை, துணைப்பதிவாளர்க்காக

பெறுநர்
1. தலைமைச்செயலாளர்,

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

இந்தியை எதிர்த்து மீண்டும் போராடுவோம்!

பணத்தினாலே இந்திரா கட்சி வென்றது . . .

3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி!

என்பது போல், 'இத் தேர்தல் முடிவுகள், இந்திராகாந்தி நாட்டிற்கு ஆற்றிய பணிக்கும், ஈகத்திற்கும் நன்றி செலுத்தும் வகையில் அமைந்துள்ளன' என்றும், 'இந்திரா கட்சிக்கு அளிக்கப்பட்ட ஒப்போலைகள் நாட்டின் ஒருமைப் பாட்டினை வலியுறுத்துகின்றன' என்றும், 'அவை பிரிவினைக்கு எதிரானவை' என்றும் கருத்துக் கூறியிருப்பது, அவர் தம் பதவியை நிலைப்படுத்திக் கொள்ளும்-நடுவணரசுக்கு நல்ல பிள்ளையாய் நடந்து கொள்வதாகக் காட்டிக் கொள்ளும் - வழக்கமான பேச்சே! இந்திராகாந்தி கடந்தகாலங்களில், தம்மை முழுமையாக விளம்பரப் படுத்திக் கொள்ளும் போலியான, பொய்யான, கற்பனைத் திட்ட உரைகள், செயல்கள் இவைபற்றி உண்மையான அரசியல் உணர்வுள்ள அனைவரும் அறிவர். இவற்றை அவராற்றிய பணி என்பதும், அவர் செய்த ஈகம் என்பதும் அளவுக்கு மீறிய வெற்றுரைகளே - ஏமாற்றுரைகளே ஆகும். வண்டி வண்டியாக, இந்திரா பேசிய பேச்சுகளில், ஒரு குன்றிமணி அளவுதானும் உண்மை இல்லை என்பதை அனைவரும் அறிவர். இந்திய நாட்டின் ஏழை மக்களை ஈடேற்றுவதாக அவர் கூறிய திட்டங்கள் ஓர் இம்மி அளவுதானும் நிறைவேற்றப் படவில்லை என்பதை ஏழை மக்கள் அறிய மாட்டார்களா? இன்றுள்ள மெய்யான நிலை என்ன, என்பதை ஆராய்ந்தாலே, இந்திரா காந்தியின் பேச்சுகள் வெறும் அழகு வாய்ந்தவை என்பது புலப்பட்டு விடும். 'ஏழ்மையை ஒழித்துவிட அவர் கூறிய திட்டங்கள், இன்று என்ன பயனைத் தந்துள்ளன என்பது எல்லாருக்கும் தெரியாதா? இன்று, நாட்டில் ஏழ்மையே இல்லையா? போராட்டங்கள் இல்லையா! கொள்ளைகள், கொலைகள் நடைபெறுவதில்லையா? தொழிலாளர்களுக்குப் போதுமான வாழ்வியல் நலன்கள் கிடைத்து விட்டனவா? இலங்கைச் சிக்கலைத் தீர்ப்பதாக அவர் முயற்சி மேற்கொண்டாரே, அந்தச் சிக்கல் தீர்க்கப் பட்டு விட்டதா? இன்று, இலங்கையில் தமிழர் படுகொலைகளே நடைபெறுவதில்லையா? பெண்கள் கற்பழிக்கப் படுவதே இல்லையா? பின் ஏன் இந்த, இந்திராவைப்பற்றிய புசமுரைகள்! அவர் செய்த பணிகள்தாம் என்ன? வெறும் விளம்பரம்! விளம்பரம்! விளம்பரம்! அவர் பெயர் உலகமெல்லாம் கொண்டாடப் படவேண்டும், அவர் குடும்பத்தினரே, இந்தியாவை நிலையாக என்றென்றும் ஆண்டு கொண்டிருக்க வேண்டும், என்னும் வகையில் என்னென்ன திருத்தங்கள் ஏற்பாடுகளை முன்னெச்சரிக்கையாகச் செய்து கொள்ள வேண்டுமோ அவற்றையெல்லாம் மிகவும் திறமையாக - கரவாக - அவர் செய்து கொண்டார். இவற்றைவிட அவர் எந்தப் பணியைச் செய்தார்? எந்த ஈகத்தை (தியாகத்தை) நாட்டுக்காகச் செய்தார் என்று மூப்பனார்கள் விரல் விட்டு எண்ணிக் கூறமுடியுமா? மக்கள் சிந்திக்க வேண்டும்!

'ஆடுகளுக்கு ஒநாய்தான் அரசனாக வரமுடியும்' என்பது படியாக, 'திருடர்களுக்குள் ஒரு முழுத் திருடனே அதிகாரம் செலுத்த முடியும்' என்பதாக, 'குருடர்களுக்கும் கோல் வைத்திருப்பவனே வழி காட்டி' என்னும்படி, இன்று இந்திரா கட்சி அரசைக் கைப்பற்றியுள்ளது.

மற்றபடி, இங்கு நடந்தது உண்மையான குடியரசு அமைப்புப்படி நடைபெற்ற தேர்தலா? மக்களின் கருத்தை உண்மையாக இதனால் அறிய முடியுமா? நம் நாட்டில் நேர்மையான முறையில், தேர்தல் நடைபெற வேண்டுமானால், கட்சிகளுக்குச் சமவாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டாமா? ஆளுங் கட்சி, தேர்தல் காலத்தில் அதிகாரத்தில் இருக்கலாமா? பணமும் அதிகாரமும், அரசுக்கருவிகளும், நேர்மையான போட்டியை நடத்த முடியுமா? வானொலியும் தொலைக்காட்சியும் அரசின் கைகளில் இருக்கும் வரை, மக்கள் மூளைச் சலவை செய்யப் படமாட்டார்களா? கட்சிகள் சமநிலை பெறவேண்டுமானால், தேர்தலில், பண ஆளுமையும், அதிகாரச் சூழ்ச்சிகளும் தடுக்கப்பட வேண்டாவா? ஒருகட்சி வளர்ச்சி பெறுமானால் - அதன் வளர்ச்சிக்கே வாய்ப்புகள் அளிக்கப் படுமானால், குடியரசமைப்பு எப்படி வளர்ந்து வலிவுள்ளதாக ஆக முடியும்! அந்நிலை அவ்வமைப்பையே சீர்குலைத்து விடாதா? மக்களின் அறிவை வளர்த்தெடுக்காமல், குடியரசமைப்பு எப்படி வெற்றிபெற முடியும்? மக்களின் அறிவு இப்பொழுதுள்ள நிலையில் எவ்வாறு வளர முடியும்? மக்கள் அறிவு பெற அரசு என்னென்ன வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறது? மதங்களையும், மூடநம்பிக்கைகளையும், சாதிவெறிகளையும், இனக்காழ்ப்பையும், போலிப் பெருமையையுமன்றோ உருவாக்கி வருகிறது. இந்த நிலையில் நாடு முன்னேறுவது எப்படி? பண முதலைகளின் கைகளிலிருந்து மக்களுக்கு விடுதலை கிடைப்பது எவ்வாறு?

எப்படியோ, தேர்தல் என்னும் பெயரில் சூதும், சூழ்ச்சியும், பணவல்லாண்மையும் வென்று விட்டன. இந்த நிலைகளுக்கெல்லாம் இப்பொழுதைக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று நாம் நம்பிவிட முடியாது. இருப்பினும், நாம் உள்ள நம்பிக்கையையும் இழந்து விடவும் முடியாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்திரா கட்சி வளர்ந்து வளர்வது, தமிழினத்தின் நலிவுகளுக்கே வழிவகுப்பதாகும். அதன் வளர்ச்சிக்கு அ.தி.மு.க. தொடர்ந்து துணை போகுமானால், தமிழகம் இன்னொரு தமிழீழமாக ஆகிவிடும் என்பதில் ஐயமே இல்லை. எப்படியோ, இந்தியா அனைத்ததிகார நாடாக மாறிவருகிறது. மக்கள் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும். o

"தென்மொழி இலக்கியக் கழகம்"

இரண்டாவது கூட்டம் • நெல்லை

தி.பி. 2016, சிலைத்திங்கள் 22-ஆம் பக்கல் (6.1.1985) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் நெல்லைச் சந்திப்பு - நகராட்சித் திருமண மண்டபத்தில் "தென்மொழி இலக்கியக் கழகம்" - என்னும் இலக்கிய அமைப்பின் இரண்டாவது கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நெல்லை, பாளை நகரங்களிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் இருபதுபேரும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டு கருத்தறிவித்ததும், கொள்கை விளக்கம் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. அதியமான், திரு. பே. பாலரசு, திரு. இனநலவேந்தன், திரு. பொற்செழியன், திரு. கோ. எழிலன், திரு. சாகிர் உசேன், திரு. அ. செழியன், திரு. எசு.ஏ. சந்திரன், திரு. ச. வேல்பாண்டி, திரு. மு. சேக்தாவூது, திரு. அ. பழனிச்சாமி, திரு. மு. மணி, திரு. இராம. தமிழ்மணி, திரு. மு. மு. மாணிக்கம், திரு. பி எம் எசு. பீர்முகமது, திரு. பா. சங்கர், திரு. என். முகமது இசுமாயில், திரு. இ. பவர்சிங், திரு. மு. சாந்தகுமார், திரு. ஆர். சண்முகம் ஆகியோர் வருகை தந்தனர்.

பொதுவுடைமைக் கட்சி சார்ந்தவராகத் தம்மைக் காட்டிக் கொண்ட இருவரின் ஐயப்பாடுகளைத் தெளிவிக்க முயன்ற உ.த.மு.க. துணைப் பொதுச் செயலாளர் தென்னவன்கோ, 'கொள்கையில் நாங்கள் மிகத்தெளிவாக உள்ளோம்'' நம் தமிழினத்தின் எல்லா நலன்களையும் உள்ளடக்கிய கொள்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ் வினத்தின் அடிமைத் தளையுடைக்க எங்களை ஒப்புவித்துக் கொண்டுள்ளோம். ஒளிவுமறைவின்றியும் முரண்பாடின்றியும் மிக வெளிப்படையாகவே கொள்கைகளை மக்களிடைப் பரப்பி வருகிறோம். குழப்பம் எங்களுக்கு இல்லை. விளங்கிக் கொண்டவர் உடன்வரலாம். இல்லெனில் விலகி நிற்கலாம். வழிபடைத்துக் கொள்ள மட்டும் கருதவேண்டாம். எல்லாவற்றுக்கும் வாய்ப்பினை வழங்கியுள்ளோம்'' என்று விளக்கியுரைத்தார்.

பின்னர், தென்மொழி, தமிழ்நிலம் இதழ், கொள்கை பரப்புதல் தொடர்பாகவும், மறு கூட்டம் தொடர்பாகவும் முடிவெடுக்கப்பெற்று கூட்டம் இரவு 8 மணிக்கு முடிவு பெற்றது.

இலங்கைச் சிக்கலை உலக ஒன்றியப்பேரவைக்கு..

3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

உடனடியாக அனுப்பி வைக்கக் கோரிக்கை எழுப்புதல் வேண்டும். உ.ஒ.தில் உறுப்பினர்களாக உள்ள 157 நாடுகளில் ஒன்றுதானே இத்தகைய முயற்சியைச் செய்ய முடியும். அந்தநாடு இந்தியாவாகத் தானே இருக்க முடியும். இந்தியாவே பின்வாங்கும் போது, வேறு எந்த நாடு, இந்தச்சிக்கலை உலக ஒன்றியப் பேரவையில், தீர்மானமாக்க் கொண்டு செல்ல முடியும்? இலங்கையில் உள்ள தமிழினத்தின் தாயினம் உள்ள நாடு இந்தியாதானே! பின் ஏன் இந்தியா தயங்க வேண்டும்? தன் நாட்டுப் படையைத்தான் அனுப்பி நடவடிக்கை எழுப்புகிற துணிவும், அறிவும், அக்கறையும் இந்தியாவிற்கு இல்லையானாலும், உ.ஒ. படையை அனுப்ப அந்தப் பேரவையில் ஒரு தீர்மானத்தைக் கூடவா நிறைவேற்ற இந்தியாவால் இயலாது? நடுவணரசு தமிழினத்தைத் தன் பகையினமாகக் கருதினால்தான் அது வாளாவிருக்க முடியும். அவ்வாறில்லை என்று கருதினால், ஏன் இந்திய அரசு உடனடியாக இந்த நடவடிக்கையை எடுக்கக்கூடாது? பொறுத்திருந்து பார்ப்போம். o



அண்ணா!

என்ன தம்பி?

இலங்கைப் பாராளுமன்றத்தில் சிரில் மேத்யு என்ற முன்னாள் சிங்கள அமைச்சர் தமிழீழ விடுதலைப் போராளிகளை 'வெறிநாய்கள்' என்று குறிப்பிட்டுப் பேசியிருப்பதைப் பார்த்தீர்களா?

பார்த்தேன்

தமிழர்கள் அனைவருமே நாய்கள்தாம்! விடுதலை வேண்டுபவர்கள் வெறிநாய்கள் மற்றவர்கள் வெறும் நாய்கள்! உரிமையின்றி அடிமைகளாய் நாய்களைப்போல் தமிழர்கள் சிங்களத்தில் வாழ்வதுஎன்றால் வாழலாம். இல்லையென்றால் வெறிநாய்களைக் கொல்வதுபோல சிலநேரங்களில் வீட்டுநாய்களையும் கொல்வது போல அவர்களையெல்லாம் கொன்று அழிப்போம் என்று சொல்வது போல்தானே இருக்கிறது அவருடைய பேச்சு!

எனக்குத் தெரியாது தம்பி!

— தமிழவேள்

5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.
2. தலைமைச் செயலாளர்,
இந்திய அரசு,
புதுதில்லி.
3. முதலமைச்சர்,
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

— திரு. பெருஞ்சித்திரனாரிடம் இருபடிகள், அதற்குரிய தொகை பெற்றுக்கொள்ளப் பெற்றுக் கொடுக்கப்பெற்றன. o

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

அனுப்புதல்: பெறுநர்.
நூல்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.